பிரசங்கியார்கள், மூப்பர்கள் மற்றும் பாவிகளுக்கான ஒரு பிரசங்கம் (20:13-38; 21:1)

பவுல் பிரசங்கித்தவைகளில் ஏழு பிரசங்கங்கள் நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.[1] அவைகளில் - அப். 20ல் பதியப்பட்டுள்ள - ஒன்றே ஒன்றுதான் கிறிஸ்தவர்களுக்கென்று பிரசங்கிக்கப்பட்டதாகும்.

நமது முந்திய பாடத்தின் முடிவில், பவுல் துரோவாவை விட்டுப்புறப்படத் தயாராக இருந்தார் (20:11).[2] தம்முடைய பயணத் துணைவர்களைக் கப்பல் ஏறும்படிக் கூறிய பவுல், ஆசோ[3] பட்டணம் வரையிலும் தரைப் பயணத்தை மேற்கொண்டார், அப்பட்டணம்தான் அடுத்த துறைமுகமாய் இருந்தது (வ. 13). கப்பல் புறப்படும்போது அவர் ஒருவேளை தயாராகாமல் இருந்திருக்கலாம் (துரோவாவில் இருந்த சகோதரர்களுடன் அவர் இன்னும் சற்று நேரம் செலவிட விரும்பியிருக்கலாம்). ஒருவேளை அவர் தனித்திருக்க விரும்பியிருக்கலாம்.[4] லூக்கா பின்வருமாறு எழுதினார்:

> அவன் ஆசோ[5] பட்டணத்திலே எங்களைக் கண்டபோது, நாங்கள் அவனை ஏற்றிக்கொண்டு, மித்திலேனே[6] பட்டணத்துக்கு வந்தோம். அவ்விடம் விட்டு, மறுநாளிலே கீயு[7] தீவுக்கு எதிராக வந்து, பவுல் கூடுமானால் பெந்தெகொஸ்தே[8] பண்டிகை நாளிலே எருசலேமிலிருக்க வேண்டுமென்று தீவிரப்பட்டதினிமித்தம், தான் ஆசியாவிலே[9] காலம் போக்காதபடிக்கு, எபேசு பட்டணத்தைக் கடந்து போக வேண்டுமென்று தீர்மானித்ததினால், மறுநாளிலே சாமுதீவு[10] பிடித்து, துரோகில்லியோன் ஊர்த்துறையிலே தங்கி, மறுநாள் மிலேத்து[11] பட்டணத்துக்கு வந்தோம் (20:14-16).

மிலேத்துவில் கப்பல் சரக்குகள் ஏற்றப்பட்டதால் அல்லது இறக்கப்பட்டதால் (அல்லது ஒருவேளை பழுது நீக்கும் பணி நடந்ததால்) பவுல் இரண்டு மூன்று நாட்கள் அங்கேயே தங்கியிருக்க வேண்டியதாயிற்று. அவர் எபேசுவுக்கு ஒரு செய்தியாளரை அனுப்பி, அங்கிருந்த சபையின் மூப்பர்களை மிலேத்துவுக்கு வரும்மாறு கேட்டுக்கொண்டார்.[12] அவர்கள் அவரைக் காண்பதற்காகத் தெற்கு நோக்கி சுமார் முப்பது மைல்கள் பயணம் செய்தார்கள்; அவர்கள் (மிலேத்துவை) அடைந்த போது, பவுல் அப். நட. 20ல் காணும் மாபெரும் பிரிவு உபசார உரையை நிகழ்த்தினார்.

பவுலின் வார்த்தைகளை நான், "பிரசங்கியார்கள், மூப்பர்கள் மற்றும் பாவிகளுக்கான ஒரு பிரசங்கம்" என்று நினைக்க விரும்புகின்றேன். இந்தப் பிரசங்கமானது மூப்பர்களுக்கானது என்பது தெளிவு; அது நேரடியாக அவர்களுக்கே உரைக்கப்பட்டது (வ. 17). எபேசுவில் பவுலின் ஊழியம் பற்றிய அவருடைய அறிக்கையானது பிரசங்கியார்களுக்கும் மதிப்புடையதாகும். இருப்பினும் அதில், *எல்லா* உறுப்பினர்களுக்குமான மறைமுகக் கருத்துக்களும் அடங்கியுள்ளன என்று நான் நினைக்கின்றேன். அங்கு பவுலும், எபேசுவின் மூப்பர்களும் மட்டுமே இருந்தார்கள் என்பதற்கில்லை என்பதை நினைவில் வையுங்கள்; பவுலுடன் பயணத் தோழர்களாகக் குறைந்தது எட்டுப் பேர் இருந்தார்கள் (வ. 4-6). ஆகவே இந்த வேத பாடப்பகுதியில் இருந்து எல்லாருக்கும் பயன்படக் கூடிய சத்தியங்களை நான் எடுத்துக் கொடுக்க விரும்புகின்றேன்.

பிரசங்கியார்களுக்கான ஒரு பிரசங்கம்

நாம் பிரசங்கியார்களுடன் தொடங்குவோம். பலர் பிரசங்கியார்களாய் இராததினால், பிரசங்கியாராய் இராதவர்களிடத்தில் பிரசங்கித்தலைப் பற்றிப் பேசுவது வினோதமாயிருக்கலாம். இருப்பினும் பிரசங்கித்தலைப் பற்றி வேதவசனம் என்ன கூறுகின்றது என்பதை அறிவது எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பயனுள்ளதாகவே இருக்கின்றது. பிரசங்கித்தலைப் பற்றிய பல கருத்துக்கள் நாமகரண நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளனவேயன்றி, வேதாகமத்தின் போதனைகளை

அடிப்படையாகக் கொண்டிருப்பதில்லை.

பிரசங்கித்தலைப் பற்றிய முழு விஷயம்தான் என்ன

பிரசங்கித்தலைப் பற்றிய விஷயம்தான் என்ன என்பதைப் பற்றிப் பவுலின் பிரசங்கமானது நமக்குக் கூறுகின்றது. நாம் எதிர்மறையானவற்றுடன் தொடங்குவோம். பிரசங்கித்தல் என்பது தொல்லையற்ற ஒரு வாழ்க்கையைப் பற்றியதல்ல.[13] *பவுல் தமக்கு நேரிட்ட சோதனைகளைப் பற்றியும், கண்ணீர்களைப் பற்றியும் பேசினார் (வ. 19; வ. 31ஐயும் காணவும்). அவர் நீண்ட மணி நேரங்களைப் பற்றிப் பேசினார்: "... இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக்கொண்டு வந்ததை ..." (வ. 31). அவர், காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பார்க்கும் வேலையில் இருந்ததில்லை. அவர் எருசலேமில் தமக்காக வைக்கப் பட்டிருந்த "கட்டுக்களும் உபத்திரவங்களும்" (வ. 23) பற்றிப் பேசினார்.*

பிரசங்கித்தல் என்பது பணம் சம்பாதித்தலைப் பற்றியதல்ல. பவுல் தமது முரடான, காய்ப்புக் காய்த்திருந்த கைகளை மூப்பர்களிடத்தில் காண்பித்து, "நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனே கூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தது" (வ. 34) என்று கூறுவதை என்னால் காண முடிகின்றது. பிரசங்கியார் உதவி பெறுபவராயிருப்பதென்பது வேதவசனத்தின்படியானதேயாகும் (லூக். 10:7; 1 கொரி. 9; 1 தீமோ. 5:18), ஆனால் அது ஒன்று மட்டுமே ஊழியத்தைப் பற்றிய எல்லாமும் ஆகி விடாது, மாறாக அது ஒருவரின் சிறப்பான ஊழியத்தை நிறைவேற்றுவது பற்றியதாக இருக்கின்றது.

பிரசங்கித்தல் என்பது பணிப் பாதுகாப்பைப் பற்றியதல்ல. பவுல் தமது உரையைக் கேட்டவர்களிடத்தில், "இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன்" (வ. 22) என்று கூறினார். அடுத்த நாள் எதைக் கொண்டுவரும் என்பதைப் பிரசங்கியார்கள் அன்றாடம் ஒருபொழுதும் அறிவதில்லை.

பிரசங்கித்தல் என்பது மேய்ப்பதைப் பற்றியதல்ல என்ற

சத்தியத்தையும் நமது வேதபாடப் பகுதியானது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. எபேசுவில் இருந்த பிரசங்கியார்களைப் பவுல் அழைத்திருக்கவில்லை; அவர் மூப்பர்களையே அழைத்திருந்தார் (வ. 17). நாம் காணப் போகின்றபடி, மூப்பர்கள் மேய்ப்பர்களாக இருக்கின்றார்கள் (வ. 17, 28); பிரசங்கியார் “அந்த மேய்ப்பர்” அல்ல. (எப்போதாவது, ஒரு பிரசங்கியார், மூப்பர்களில் ஒருவராகப் பணி புரியலாம்,[14] ஆனாலும், பிரசங்கியார் என்ற அவர் தம் பொறுப்பில் அவர் வேதாகமத்தின் நிலைப்பாட்டின்படியாக “அந்த மேய்ப்பர்” என்று ஆவதில்லை.)

எதிர்மறையானவற்றில் இருந்து நேர்மறையானவற்றிற்குக் கடந்து செல்லுகின்றோம், பிரசங்கத்தில் இருக்க வேண்டியவை எவை என்பது பற்றி இப்பிரசங்கம் கூறுகின்றது. ஒரு பிரசங்கியார் தமது நேரத்தை எவ்விதம் செலவிட வேண்டும் என்பது பற்றிய சொந்த கருத்துக்களும், அவர் எதைப் பற்றிப் பிரசங்கிக்க வேண்டும் என்ற எண்ணப் போக்குகளும் அநேகமாக ஒவ்வொருவரிடத்திலும் உள்ளன. நாம் பவுலிடத்தில் கேட்போம்: “பிரசங்கித்தலைப் பற்றிய முழு விஷயம்தான் என்ன? எபேசுவில் நீங்கள் செய்தது என்ன?” அவர் முதலாவது, “நான் பிரசங்கித்துப் போதித்தேன்” (வ. 20, 25) என்று கூறுவதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. பிரசங்கியார்களின் வாழ்க்கையில் கலக்கம் ஏற்படுத்தி அவர்களின் முக்கிய பணியிலிருந்து அவர்களை விலக்கி வைக்கப் பார்க்கும் அற்பமான வேலைகளைப் பற்றி பவுலின் வார்த்தைகள் ஒன்றும் கூறவில்லை.

பின்பு பவுல் தமது வார்த்தைகளை விரிவாக்குவதை என்னால் கேட்க முடிகின்றது: “நான் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்துப் போதித்தேன்.” அவர், “பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக் கொடுக்கிறேன்” (வ. 32) என்று கூறினார்.

தேவனுடைய வசனம் யாவற்றையும் தாம் பிரசங்கித்ததாகவும் போதித்ததாகவும் பவுல் வலியுறுத்தினார்.[15] “பிரயோஜனமானவைகளில் ஒன்றையும்” அவர் எபேசியர்களுக்கு

அறிவிக்கத் தவறியிருந்ததில்லை (வ. 20), மேலும் “தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் [பவுல்] மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் [அவர்களுக்கு] அறிவித்தபடியினால் எல்லாருடைய இரத்தப் பழிக்கும் அவர் நீங்கி சுத்தமாயிருந்ததாக[16] வலியுறுத்தினார் (வ. 26, 27). பிரசங்கியார் தேவனிடத்தில்தான் முதல் பொறுப்புடையவராயிருக்கின்றார். மக்களை மகிழ்ச்சிப் படுத்துவதோ, அவர்கள் நலமாய் உணருவதை மட்டும் கவனிப்பதோ அல்லது கூட்டங்களைப் பெருக்குவதோ அல்ல, ஆனால் “தேவனுடைய ஆலோசனையில், ... எல்லாவற்றையும்’’ (வ. 26) பிரசங்கிப்பதே பிரசங்கியாரின் தலையாய கடமையாகும்!

அடுத்ததாகப் பவுல், ‘‘என்னால் முடிந்த இடங்களில் எல்லாம் நான் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்துப் போதித்தேன்’’ என்று கூறுவதை நான் கற்பனை செய்ய முடிகின்றது. அவர் ‘‘வெளியரங்கமாக வீடுகள்தோறும்’’ போதித்தார் (வ. 20). “பிரசங்க மேடையை நிறைப்பது’’ மட்டுமே தேவை என்று நினைக்கும் பிரசங்கியார் எவரும் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள அறைகூவலின் நோக்கத்தை/ அதன் பரப்பெல்லையை புரிந்து கொள்ளுவதில்லை.

நிறைவாகப் பவுல், “என்னால் முடிந்த இடத்திலெல்லாம், சகல மனிதர்களுக்கும் நான் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்துப் போதித்தேன்’’ என்று அறிவிப்பதை நான் கேட்கின்றேன். அவர், “யூதருக்கும் கிரேக்கருக்கும்” (வ. 21) மாண்புடன் சாட்சியளித்தார். அவர் பட்சபாதம் பார்த்துக் கொண்டு இருக்கவில்லை. ஒவ்வொருவருக்கும் உதவி செய்யத் தயாராய் இராத வரையிலும் ஒரு பிரசங்கியார் ஒருவருக்கும் உதவி செய்யத் தயாராய் இருப்பதில்லை.

பிரசங்கியாரின் எண்ணப்போக்கு எப்படியிருக்க வேண்டும்

ஒரு பிரசங்கியார் என்ன செய்ய வேண்டும் என்பதை மட்டுமல்லாது, ஒரு பிரசங்கியாரின் உணர்வுகள் எப்படியிருக்க வேண்டும் - அவர் வளர்த்துக் கொள்ளத் தேவையான எண்ணப் போக்குகள் யாவை என்பது பற்றியும் பவுல் பேசினார். சரியான செயல்களைச் செய்வதைக் காட்டிலும் சரியான எண்ணப் போக்கு கொண்டிருப்பதென்பது கடினமானதாக இருக்கின்றது.

பிரசங்கியார் தாழ்மையான எண்ணப் போக்கு கொண்டிருப்பது தேவையாகும். பவுல் "வெகு மனத்தாழ்மையோடு" கர்த்தருக்கு ஊழியஞ் செய்தார் (வ. 19). "ஊழியர்"[17] என்ற வார்த்தை "பணியாளர்" என்று அர்த்தப்படுகின்றது. ஒரு பிரசங்கியார் என்பவர் ஒரு பணியாளர் மட்டுமேயாவார் (ரோமர் 12:3; பிலி. 2:3-5 ஐக் காண்க). அவர் ஒரு மேய்ப்பரல்ல; சபையை நடத்துவதென்பது அவருடைய பணியல்ல. வசனத்தைப் பிரசங்கிப்பதே அவரது பணியாகும் - அதை அவர் முழுமையாகப் பிரசங்கிக்க வேண்டும்.

பிரசங்கியார் நம்பிக்கையின் எண்ணப் போக்குள்ளவராக இருக்க வேண்டும். பவுலுக்கு உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையிலும் பயம் இருந்தது (2 கொரி. 11:23-33). அவருடைய இடத்தில் நான் இருந்திருந்தால், "நான் போதுமான உபத்திரவப்பட்டு முடித்து விட்டேன். எனது பங்கை நான் நிறைவேற்றி விட்டேன். இப்பொழுது ஓய்வு பெறும் காலமாகிவிட்டது" என்று நான் கூறியிருப்பேன். இருந்தாலும் விட்டு விலகும் திட்டம் எதையும் பவுல் பெற்றிருந்ததில்லை. அவர் தொடர்ந்து செல்லும்படிச் செய்தது எது? கர்த்தரிடத்தில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையே ஆகும் (வ. 21, 32). என்ன நடந்தாலும், அவர் தேவனுடைய கரங்களில் இருந்தார்! எதிர்காலத்தைக் குறித்து அவர், எபேசுவின் மூப்பர்களிடத்தில் பின்வருமாறு கூறினார்:

> இப்பொழுதும் நான் ஆவியிலே[18] கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங் காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும்[19] தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும் அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப் படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்;[20] என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன் (வ. 22-24).

மேற்கத்திய வேதபாடத்தில், வசனம் 24ன் தொடக்கத்தில் "ஆனால் நான் எனக்கென்று ஏதொன்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ளுகிறதில்லை" என்ற வார்த்தைகளும் கூடத் தரப்பட்டுள்ளன. "ஆகிலும் அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்" என்ற KJVயின் வழிமுறையையே நான் விரும்புகின்றேன். பலவிதமான விஷயங்கள் நம்மைக் கவலைப் படுத்துவதை நாம் அனுமதிக்கின்றோம்: விமர்சனம், மரணம், தோல்வி, வியாதி, தனிமை, பணிப் பாதுகாப்பின்மை, எதிர் காலம், முதிர்வயது ஆகியவை பற்றி நாம் அச்சப்படுகின்றோம். தனிப்பட்ட இடர்ப்பாடுகள், உடல் நலப் பிரச்சனைகள் மற்றும் பணித் தொடர்பான அழுத்தங்கள் ஆகியவை என்னை விழச் செய்வதற்கு நான் அனுமதிக்கின்றேன். இதற்கு மாறாகப் பவுல், தம்மைக் கவலைக்குள்ளாக்கும் ஒரே ஒரு விஷயம், தேவன் அவருக்குக் கொடுத்த ஊழியத்தை நிறைவேற்றுவதேயாகும் - முடிவு வரையில் உண்மையாயிருப்பதேயாகும் - என்று கூறினார்!

பிறர் துன்பம் கண்டு இரக்கம் கொள்ளும் பெரும்பண்பும் பிரசங்கியாரிடத்தில் இருப்பது தேவையாகும். இந்தப் பிரசங்கத்தில், பவுல் கண்ணீர் விட்டது பற்றிப் இரண்டு முறை பேசினார் (வ. 19, 31). உண்மையான மனிதர்கள் அழ முடியும் (யோவா. 11:35; 2 கொரி. 2:4; பிலி. 3:18). பிரசங்கிப்பதில் அடங்கியுள்ள யாவும் உங்கள் இருதயத்தைத் தொடவில்லையென்றால், நீங்கள் ஒரு பிரசங்கியார் ஆகாதிருங்கள்!

மூப்பர்களுக்கான ஒரு பிரசங்கம்

அடுத்ததாக, நாம் மூப்பர்களிடமாய்த் திரும்புவோம். முதலாவதாகவும் மற்றும் முக்கியமாகவும் இது மூப்பர்களுக்கென்று இலக்கிடப்பட்ட ஒரு பிரசங்கம் ஆகும் (வ. 17[21]). மறுபடியும், மூப்பர்களாய்ப் பலர் இல்லாதிருப்பதினால், மூப்பராயிருப்பது பற்றி மூப்பரல்லாதவர்களிடத்தில் பேசுவது சிறிதளவே பயனுள்ளதாயிருப்பதாய்க் காணப்படலாம். இருப்பினும், இந்தப் பாடத்தைப் படிப்பவர்களில் பலர் மூப்பராவதை விரும்புவார்கள் என்பதே எனது நம்பிக்கையும் ஜெபமும் ஆகும் (1 தீமோ. 3:1). மற்றும், வசனரீதியாக

மூப்பராயிருப்பதில் அடங்கியுள்ளவை யாவை என்பது பற்றி தேவனுடைய பிள்ளையாயிருக்கின்ற ஒவ்வொருவரும் அறிவது அவசியம் என்றும் நான் நம்புகின்றேன்.

எவையெல்லாம் மூப்பராயிருப்பதைப் பற்றியதல்ல

மீண்டும் ஒருமுறை நாம் எதிர்மறையுடன் தொடங்குகின்றோம். மூப்பராயிருப்பது என்பது மகிமை மற்றும் மேன்மைக்காக அல்ல. எபேசுவின் மூப்பர்களுக்குப் பவுல் கொடுத்த எச்சரிக்கைகளைக் கவனத்துடன் வாசியுங்கள். அவர், *ஊழியம் மற்றும் பொறுப்பு* ஆகியவை பற்றி மட்டுமே பேசினார். ஒரு மேய்ப்பரின் ஊழியம் என்பதையே அவர் தமது முக்கிய விளக்கமாகப் பயன்படுத்தினார். மேய்த்தல் என்பது அசுத்தமான, நாற்றம் பிடித்த ஒரு வேலையாகும்; அதைச் செய்பவர் ஆடுகளுடனேயே வாழ வேண்டும். இது ஒரு அபாயகரமான வேலையாகும்; காட்டு மிருகங்கள் இருந்தன. இது ஒரு வசீகரமுள்ள வேலையல்ல.

மீண்டுமாய், மூப்பராய் இருப்பது என்பது பணம் சம்பாதிப்பதற்காகவோ அல்லது வாழ்க்கையில் முன்னேறுவதற்காகவோ அல்ல. மூப்பர்களுக்கு ஊதியம் தருவதென்பது வசனரீதியானதேயாகும் (1 தீமோ. 5:17, 18),[22] ஆனால் இதுவே (மூப்பராயிருப்பதென்பதன்) எல்லாமுமாகி விடாது. "பண ஆசையில்லாத"வராயிருக்க வேண்டும் என்பது மூப்பர்களுக்கான தகுதியாம்சங்களில் ஒன்று ஆகும் (1 தீமோ. 3:3; தீத்து 1:7; 1 பேது. 5:2 ஆகியவற்றையும் காணவும்). பவுல் தமது எடுத்துக்காட்டைப் பின்பற்றும்படியும், "வெள்ளியையோ, பொன்னையோ, வஸ்திரத்தையோ"[23] இச்சியாதிருக்கும்படியும் (அப். 20:33; வ. 34, 35ஐயும் காணவும்) எபேசுவின் மூப்பர்களை வற்புறுத்தினார்.

மற்றும் மூப்பராயிருப்பதென்பது விரிவான அதிகார அடிப்படையை நிலைநாட்டுவதற்கல்ல. பின்வந்த ஆண்டுகளில், சபையில், விசுவாச விலக்கம் ஏற்படுகையில், பெரிய பெரிய எல்லைப் பகுதிகளுக்குத் தங்கள் அதிகாரத்தைச் சபை முன்னோடிகளில் சிலர் ஏற்படுத்திக் கொண்டார்கள். எபேசுவின் மூப்பர்கள் எபேசுவில் இருந்த சபையை, அந்த சபையை மாத்திரமே கண்காணிக்கும் பொறுப்பைப் பெற்றிருந்

தார்கள் (பிலி. 1:1; 1 பேது. 5:2). வில்லியம் பார்க்ளே அவர்கள், “[மூப்பர்கள்] உள்ளூர் அலுவலர்களாகவே இருந்தார்கள், அவர்கள் பிரித்து வைக்கப்பட்ட இடத்தின் மீதே அவர்களின் அதிகாரம் இருந்தது” என்று கூறினார்.”

மூப்பராயிருப்பது என்பதுதான் என்ன

இப்பொழுது நாம் நேர்மறைக்குத் திரும்புவோம்: மூப்பராக இருப்பது என்றால், முதலாவதாக, ஒரு நல்ல நபராய் இருப்பதாகும், ஒவ்வொரு கிறிஸ்தவருமே இவ்விதமாகவே இருக்க வேண்டும் (வ. 28; 1 பேது. 5:3ஐயும் காணவும்).

மூப்பராக இருப்பது என்றால், தேவனால் தரப்பட்டுள்ள சில குறிப்பிட்ட தகுதியாம்சங்களைக் கொண்டிருத்தல் என்பதாகும். எபேசுவில் இருந்த மூப்பர்களைப் பரிசுத்த ஆவியானவரே கண்காணிகளாக்கியிருந்தார் என்று பவுல் கூறினார் (அப். 20:28). இதை ஆவியானவர், மூப்பர்களாவதற்குரிய தகுதிகளைப் புறக்குறிப்பிடுவதன் மூலம் செய்தார் (1 தீமோ. 3:1-7; தீத்து 1:5-9). மூப்பர்கள், உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டு, நியமிக்கப்பட்டாலும் கூட, அவர்கள் தெய்வீகக் கட்டளையை உணர வேண்டும். உண்மைக் கருத்தில், பரிசுத்த ஆவியானவரே அவர்களைக் கண்காணிகளாக்கியிருக்கின்றார்; தேவனுக்கே அவர்கள் முதன்மைப் பொறுப்புடையவர்களாயிருக்கின்றார்கள் (எபி. 13:17).

மூப்பராக இருப்பது என்பது குறிப்பிட்ட அளவுக்கு ஆவிக்குரிய பக்குவம் பெற்றிருப்பது என்பதாகும். Presbuteros என்ற கிரேக்க வார்த்தையே “elder” - “மூப்பர்” (வ.17) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மூப்பர்கள், “presbyters”[24] என்றும் அழைக்கப்பட முடியும். Presbuteros என்றால் “முதிர் வயதான [மனிதர்]” என்பதே நேரடி அர்த்தமாகும். வருடக் கணக்கின்படியான வயது ஒரு முக்கியமான காரணியேயாகும், ஆனாலும் பக்குவம் என்பதுதான் மிக முக்கியமான காரணியாக இருக்கின்றது. மூப்பர் என்பவர் பக்குவப்பட்ட முடிவு எடுக்க வல்லவராயிருப்பது தேவை. துன்பச் சூழ்நிலைகளில் அவர் சமமான நிலையைக் காத்துக் கொள்வதில் வல்லவராய் இருப்பது அவசியமாகும்.

மூப்பராக இருப்பது என்பது பொறுப்பை ஏற்றுக் கொள்

வதைப் பற்றியதாகும்.[25] பவுல் மூப்பர்களிடத்தில் (வ. 17), பரிசுத்த ஆவியானவரே அவர்களைக் ‘‘கண்காணிகளாக’’ (வ. 28) வைத்தார் என்று கூறினார். Episkopos[26] என்ற கிரேக்க வார்த்தையே “overseer” - கண்காணி என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது, இது “மேல்” (epi) என்பதற்குரிய வார்த்தையை “காண்” (Skopos) என்பதற்குரிய வார்த்தையுடன் இணைத்துப் பெறப்பட்ட கூட்டு வார்த்தையாகும். இது ‘‘overseer’’ [27] “கண்காணி” (மேற் பார்வையாளர்) என்று ஆகின்றது. ‘Bishop’’[28] என்பது episkopos என்பதன் ஆங்கிலப்படுத்திய வடிவங்களில் ஒன்றாகும் (பிலி. 1:1; 1 தீமோ. 3:1, 2; 1 பேது. 2:25). புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில், மூப்பராய் இருப்பதென்பது, ஆயராய் இருப்பதில் இருந்து மாறுபட்டதாயிருக்கவில்லை; இச்சொற்றொடர்கள் ஒன்றுக்குப் பதில் ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டன (அப். 20:17, 28; தீத்து 1:5, 7; 1 பேது. 5:1, 2) மற்றும் இவை ஒரே விதமான வேலையைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டன (1 தீமோ. 3:1).

உள்ளூர் சபையின் ஊழியம் பற்றிய வேலைகள் யாவற்றையும் மூப்பர்கள் கண்காணிப்பு செய்திருந்தார்கள் (செய்து கொண்டிருக்கின்றார்கள்). அரசாங்கத்தை நடத்துவது பற்றி அமெரிக்க ஜனாதிபதியாய் இருந்த ஹாரி ட்ரூமன் அவர்கள், “The buck stops here” என்று கூறுவதுண்டு. பிராந்திய சபையின் செயல்கள் பற்றிக் கூற வேண்டுமென்றால் மூப்பர்களோடு“the buck stops’’ என்று கூறலாம். இருப்பினும், மூப்பர்கள் அவர்களின் பணி நிறைவேற்றத்திற்கு உதவி பெற முடியும். இதற்கு நமது வேதபாடப் பகுதியில் நிரூபணம் உள்ளது: மூப்பர்கள் “சபையை மேய்ப்பதற்கு” (வ. 28) பொறுப்புடையவர்களாக இருந்தார்கள்; அதாவது, அவர்கள் உறுப்பினர்களுக்குப் போதிக்க வேண்டியிருந்தது (எபி. 5:12-14). அதே வேளையில், எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குத் தாம் போதித்ததாகப் பவுல் கூறினார் (அப். 20:20). மூப்பர்களின் ஊழியத்தைப் பவுல் வன்முறையாகப் பிடுங்கிக் கொண்டாரா? இல்லை, போதித்தல் என்ற மாபெரும் பணியில் அவர் அவர்களுடன் ஒத்துழைக்க மாத்திரமே செய்தார். பலவகை பொறுப்புக்களைப் பொறுத்தமட்டில், மூப்பர்கள் மற்ற மனிதர்களின் உதவியை நாடுவது வசனரீதியானதாகவும்,

தேவைப்படுவதாகவும் கூட இருக்கின்றது (அதிகாரம் 6ல் அப்போஸ்தலர்களும் கூட இதைச் செய்தார்கள், 6:2க்கான குறிப்புகளைக் காணவும்.) அதே வேளையில், சபையின் மேய்ப்புப் பணிக்கு மூப்பர்கள் மட்டுமே பொறுப்புடையவர்கள் - ஒருநாளில் அவர்கள் தங்களின் கண்காணிப்புப் பணி[29] பற்றிக் கணக்கொப்புவிக்க வேண்டும் (எபி. 13:17) - என்பதை மூப்பர்கள் நினைவில் வைக்க வேண்டும்!

எல்லாவற்றிற்கும் மேலாக, மூப்பராக இருப்பது என்பது மேய்ப்பதைப் பற்றியதாக இருக்கின்றது. மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட மேய்ப்பர் தமது மந்தையைப் போஷிக்கின்றார் என்ற உருவகமே பிரசங்கத்தில் பெரும்பாலும் பயன்படுத்தப் படுகின்றது. மூப்பர்களுக்கான பவுலின் பொறுப்பொப்படைப்பின் மையக் கருத்தானது வசனம் 28 மற்றும் 29ல் காணப் படுகின்றது:

> ஆகையால், உங்களைக்குறித்தும்,[30] தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே[31] சம்பாதித்துக்கொண்ட தமது சபையை[32] மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்.

“மேய்ப்பதற்கு” என்று இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது “மேய்ப்பர்” என்பதைக் குறிக்கும் poimen என்ற கிரேக்க வார்த்தையின் வினைவடிவம் ஆகும். “pastor” என்பது இந்த வார்த்தையின் இலத்தீன் வடிவமாகும், இது எபேசியர் 4:13ல் உள்ள சபை முன்னோடிகளின் அட்டவணையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அப். நட. 20ல் “மூப்பர்”=“ஆயர்”=“மேய்ப்பர்” [அதாவது “elder” = “bishop” = “pastor”] என்பதைக் கவனியுங்கள் (1 பேது. 5:1, 2). (பிரசங்கியார்கள் அல்ல) மூப்பர்களே மந்தையின் மேய்ப்பர்களாக அல்லது மேய்ப்பவர்களாக இருந்தார்கள். வார்ரென் w. வயர்ஸ்ப் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> மூப்பர்கள்/ஆயர்கள் என்பவர்கள் உதவிக்காரர்களின்

> உதவியுடன் சபையை ''மேய்ப்பவர்களாக'' இருந்தார்கள் ... புதிய ஏற்பாட்டின் சபை[யில்] மூப்பர், ஆயர் மற்றும் மேய்ப்பர் ஆகிய மூன்று நியமனப் பெயர்களும் ஒரே அர்த்தம் கொண்டவைகளாகும். இந்தப் பணிக்கான தகுதியாம்சங்கள் 1 தீமோத்தேயு 3:1-7 மற்றும் தீத்து 1:5-9 ஆகிய வசனப் பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

மூப்பர்களின் பணியைப் பற்றிய ஒரு வார்த்தைப் பணி விளக்கமானது "மேய்த்தல்" என்பதாகும். ஒரு மூப்பர் எவ்விடத்தில் தமது முயற்சிகளின் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று நீங்கள் அறிய விரும்பினால், ஒரு மேய்ப்பரின் பொறுப்புக்களைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்: அவர் ஆடுகளை வழி நடத்துகின்றார். அவைகள் உணவளிக்கப்பட்டிருக்கும்படி அவர் பார்த்துக் கொள்கின்றார். அவர் அவைகளின் காயங்களுக்குச் சிகிச்சையளித்துக் கட்டுகின்றார். அவர், அவைகள் வழிதப்பிப் போகாதபடிக்குப் பார்த்துக் கொள்ள முயற்சி செய்து-அப்படி அவை வழிதப்பிப் போனால், அவைகளை மறுபடியும் கொண்டு வந்து சேர்க்கின்றார். இன்னும் மேலாக, அவர் இவை எல்லாவற்றையும் பட்சபாதமில்லாமல் செய்கின்றார். பவுல், "மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (வ. 28; அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப்படுகின்றன) என்று கூறினார். இந்தப் பாடத்தில் இதற்கு முன் நாம் பயன்படுத்திய சொற்றொடர் ஒன்றை இங்கு நாம் தழுவியமைக்கலாம்: மந்தை முழுவதையும் மேய்ப்பதற்குத் தயாராகாத வரையில், ஒரு மனிதர் எந்த மந்தையையும் மேய்ப்பதற்குத் தகுதியுடையவராவதில்லை.

இன்றியமையாத மேய்ப்புப் பணியொன்றைப் பவுல் வலியுறுத்தினார்: "மந்தையைப் பாதுகாத்தல்" என்பதே அது. ''மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள்'' வரப்போவதால் அவர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்று அவர் மூப்பர்களிடம் கூறினார் (வ. 28, 29; மத். 7:15; யோவா. 10:12) எபேசுவில் இருந்த "மந்தையில்" அந்த "ஓநாய்கள்" நுழைந்ததாக ஏவப்பட்ட மற்றும் உலகப் பிரகாரமான வரலாறுகள் நமக்குக் கூறுகின்றன மற்றும் முன்னோடிகளாய் இருந்தவர்களில் இருந்தும் கூட மனிதர்கள் எழும்பி, ''சீஷர்களைத்

தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவை களைப் போதித்த" (வ. 30) நிகழ்ச்சி பற்றியும் அவை நமக்குக் கூறுகின்றன. எபேசுவுடன் தொடர்பு கொண்டிருந்த கள்ளப் போதகர்கள் ஆறு பேரைப் பற்றிப் புதிய ஏற்பாடு பேசுகின் றது.[33] யோவானின் எழுத்துக்களில் இருந்து அறிவுடைமை வாதத்தின்[34] தவறுகள் பின்னாளில் எபேசுவில் ஒரு பிரச்சனை யாக இருந்திருக்கலாம் என்று நாம் கற்றுக் கொள்ளுகிறோம். கடைசியில், ஒரு பொதுவான விசுவாச விலக்கம் நேரிட்டது (1 தீமோ. 4:1-5; 2 தீமோ. 3:3; 4:3, 4). ("போப் என்பவர் தவறாகச் சென்ற ஒரு மூப்பரேயாவார்'' என்று அடிக்கடி கூறப்படுவது போன்றதாகும்.) சபைக்குள்ளும், புறம்பேயும் கள்ளப்போதனை குறித்து நடப்பது என்ன என்பது பற்றி மூப்பர்கள் விழிப்புணர்வுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

மூப்பராக இருப்பதில் உள்ள மற்ற அறைகூவல்கள் குறிப்பிடப்படலாம்: மூப்பராக இருப்பது என்பது சபையை அன்புகூருவதைப் பற்றியதாகும் (வ. 28). இயேசு, சபைக்காக மரித்தார். நல்ல மூப்பர் ஒருவர், சபையைப் புண்படுத்தும் எந்த ஒரு செயலையும் எப்பொழுதுமே செய்யவே மாட்டார்; தவறை அவரே முதலாவதாக அனுபவிப்பார். மேலும், மூப்பராக இருப்பது என்பது தேவனுடைய வசனத்தை அறிவதைப் பற்றியதாகும் (வ. 32). பவுலும், ஏவுதல் பெற்ற மற்ற மனிதர்களும் சென்ற பிறகு, என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்கள் எப்படி அறிய வேண்டியதாக இருந்தது? பவுல் அவர்களுக்கு வசனத்தைச் சுட்டிக்காட்டினார். மூப்பர் என்பவர் "போதக சமர்த்தராய்'' (1 தீமோ. 3:2) இருக்க வேண்டும்.

நிறைவாக, மூப்பராக இருப்பது என்பது மக்களுக்கு உதவுதலைப் பற்றியதாகும். வசனம் 32ல் முடிவுப் பகுதியாக ஒரு மாபெரும் குறிப்பு உள்ளது: "இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும்[35] அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக் கொடுக்கிறேன்.'' இருப்பினும் பவுல் இத்துடன் முடித்து விடவில்லை. அவர் தொடர்ந்து பின்வருமாறு கூறினார்:

> ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. நீங்கள் அறிந்திருக்கிறபடி எனக்கும் என்னுடனே இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தது. இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும்,[36] வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை[37] நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான் (வ. 33-35).

ஒரு மூப்பராகவோ, உதவிக்காரராகவோ, பிரசங்கியாராகவோ அல்லது வேறு எந்த ஒரு பொறுப்புள்ள முன்னோடியாகவோ ஒருவர் இருப்பினும், முடிவில், ஆவிக்குரிய தலைமைத்துவம் என்பது மக்களுக்கு உதவுவது என்ற செயல்பாட்டிற்கு வருவதாகவே இருக்கின்றது.

மற்ற பாவிகளுக்கான ஒரு பிரசங்கம்

நிறைவாக, சபையின் உறுப்பினர்களுக்கென்று நமது வேதபாடப் பகுதியில் உள்ள பாடங்களுக்கு நான் வருகின்றேன். மூப்பர்களுக்கும் பிரசங்கியார்களுக்கும் மேற்கொள்ளப்பட்ட பயன்பாடுகளில் பலவற்றை நம்மில் யாருக்கும் கூட நாம் மேற்கொள்ள முடியும்; ஒரு கருத்தின் வகையில் நாம் அனைவருமே "முன்னோடிகளாய்" இருக்கின்றோம், ஏனென்றால் ஒவ்வொருவரும் மற்றவர்களிடத்தில் செல்வாக்குடையவர்களாய் இருக்கின்றோம். ஆகையால், நாம் யாவருமே வசனத்தைப் படிப்பது தேவை (வ. 32); நாம் யாவருமே வசனத்தைப் போதிக்கின்றவர்களாய் இருப்பது தேவை (வ. 20); நாம் யாவருமே பணியாளர்களுக்குரிய இருதயங்களுடையவர்களாயிருக்க வேண்டியது தேவை; நாம் யாவரும் சுயநலமற்றவர்களாய் மற்றும் மற்றவர்களைப் பற்றிய அக்கறையுடையவர்களாயிருக்க வேண்டியது தேவை (வ. 35).

மேலும், பிரசங்கியார்கள் மற்றும் மூப்பர்கள் ஆகியோரிடம் நாம் எதைக் காண வேண்டும் என்பதையும் இவ்வசனப் பகுதியில் இருந்து நாம் கற்றுக் கொள்ள முடியும்: நமக்குச் சத்தியத்தைப் பிரசங்கிக்கின்ற, நாம் (நாம் கேட்க விரும்புவனவற்றையல்ல) கேட்கத் தேவையானவற்றைக் கூறக்கூடிய

பிரசங்கியார்கள் தேவை, மற்றும் அதை இரக்கத்துடன் செய்யக்கூடிய பிரசங்கியார்கள் தேவை. பக்குவப்பட்ட, மேய்ப்புப் பணியின் இருதயங்களுடைய மூப்பர்கள் நமக்குத் தேவை.

எல்லாவற்றிற்கும் மேலாக, உறவு முறைகளின்-சிறப்பாக சபைக்குள் உறவு முறைகளின் - இரகசியம் பற்றி இவ்வசனப் பகுதியில் இருந்து நாம் யாவரும் கற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். இவ்வசனப் பகுதியில் இல்லாதிருந்தும், இதில் காணப்படும் வரலாற்றில் முழுவதும் தோய்ந்து கிடக்கும் ஒரு வார்த்தை “அன்பு” என்பதாகும். பவுல் ஒரு தலைமைத்துவப் பயிற்சி வகுப்பை நடத்துவதற்காக முப்பது மைல்கள் தொலைவில் இருந்த எபேசுவுக்குச் செய்தியாளரை அனுப்பவில்லை, பவுல் தலைமைத்துவ நுணக்கங்களில் தேறியவர் என்பதற்காக அந்த மூப்பர்கள் அறுபது மைல்கள் (போக, வர) பயணம் செய்யவில்லை. பவுலின் உரையைத் தொடர்ந்து நடந்த உணர்வு நிரம்பிய காட்சியானது, பவுல் ஏன் மூப்பர்களை அழைத்தார் என்றும், அவர்கள் ஏன் வந்தார்கள் என்றும் காட்டுகின்றன: அவர்கள் ஒரு பிரத்தியேகமான உறவு கொண்டிருந்தார்கள்.

> இவைகளைச் சொன்னபின்பு, அவன் முழங்காற்படியிட்டு, அவர்களெல்லாரோடுங்கூட ஜெபம் பண்ணினான். அவர்களெல்லாரும் மிகவும் அழுது, என் முகத்தை நீங்கள் இனிப் பார்க்க மாட்டீர்களென்று[38] அவன் சொன்ன வார்த்தையைக் குறித்து அதிகமாய்த் துக்கப்பட்டு, பவுலின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்து,[39] கப்பல் வரைக்கும் அவனுடனே கூடப் போனார்கள் (வ. 36-38).

அவர்கள் “முழங்காற்படியிட்டார்கள்.” வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் “முழங்காலில் இருந்து ஜெபித்தல்” என்பது மிகப் பொதுவான நடைமுறை வழக்கம் என்று நாம் எண்ணுமளவுக்கு அதைப் பற்றி நாம் மிகவும் அடிக்கடி பேசியிருக்கின்றோம், ஆனால் சாதாரணமாக மனிதர்கள் ஜெபிக்கும் பொழுது நின்று கொண்டு ஜெபித்தனர். வேத வசனங்களில் மனிதர்கள் முழங்காற்படியிட்டு ஜெபிப்பதாக

நாம் வாசிக்கும் வரலாறுகள் யாவற்றிலும் உணர்வுப்பூர்வமான ஒரு சூழ்நிலை - சிலவேளைகளில் குற்ற உணர்வு அல்லது உதவியற்ற உணர்வு போன்றவை - இருந்தன என்பதில் எவ்வித மாறுதலும் இல்லை. மிலேத்துவில், மூப்பர்கள் வருத்தத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தார்கள். அழுது, பவுலைக் கட்டிப் பிடித்து மறுபடி மறுபடி முத்தம் செய்த பின்பு, அவர் செல்லுவதைக் கவனிப்பதற்காகக் கப்பல் வரைக்கும் அவர்கள் சென்றார்கள். மூல மொழியில் அதிகாரம் 21ன் முதல் வசனமானது பவுலும் மற்றவர்களும் சகோதரர்களிடத்திலிருந்து பிரிவதற்குத் தங்களையே கிழித்துக் கொள்ள வேண்டியதாயிருந்தது என்று சுட்டிக்காட்டுகின்றது (NIVயில் காணவும்). மூப்பர்கள் குதிகால்களை உயர்த்தி நின்று, கப்பலானது தங்களின் பார்வையிலிருந்து மறையும் வரை கைகளை அசைத்துக் கொண்டிருந்ததை என்னால் காண முடிகின்றது.

பவுலுக்கும் எபேசுவில் மூப்பர்களுக்கும் இடையில் ஒரு சிறப்பான பிணைப்பு இருந்தது. பிரசங்கியார்கள் மற்றும் மூப்பர்கள் ஆகியோர் ஒருவருக்கொருவர் அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அந்த சிறப்பான உணர்வு அதன் பிறகு பிரசங்கியார் - உறுப்பினர் உறவுகளில் விரிவாக்கப்பட வேண்டும். மற்றும் மூப்பர் - உறுப்பினர்கள் உறவுகளிலும், உறுப்பினர் - உறுப்பினர் உறவுகளிலும் இது விரிவாக்கப்பட வேண்டும்! எல்லா பிரசங்கியார்களுக்கும் நான் இதைச் சொல்லுகிறேன்: ஒவ்வொரு உறுப்பினரையும் கனம் பண்ணுங்கள் மற்றும் உங்கள் மூப்பர்களை கனம் பண்ணுங்கள். மூப்பர்கள் அனைவருக்கும் நான் பின்வருவதைக் கூறிக் கொள்ளுகின்றேன்: உங்கள் பிரசங்கியாரை ஆதரியுங்கள், ஒவ்வொரு உறுப்பினர் மீதும் இதமான அக்கறை காண்பியுங்கள். உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் பின்வருவதைக் கூறிக் கொள்ளுகின்றேன்: மூப்பர்களும் பிரசங்கியாரும் சாத்தியமாகாத (மிகவும் கடினமான) பணிப் பொறுப்புடையவர்களாய் இருக்கின்றார்கள் என்பதை நினைவில் வையுங்கள், மற்றும் "அந்தப் பணிகள் என்னால் சுலபமாக்கப்படுகின்றனவா அல்லது கடினமாக்கப்படுகின்றனவா?" என்று உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்.

சபையில் அன்பானது இருதயத்திலிருந்து இருதயத்திற்குப் பாய்ந்தோடினால், அது பல பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும்!

முடிவுரை

நம்மில் யாரும் நாம் எப்படியிருக்க வேண்டுமோ, அப்படியிராத காரணத்தால்தான் நான் இந்தப் பாடத்திற்கான தலைப்பில் "பாவிகள்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினேன் (ரோமர் 3:23). தேவனுடைய உதவியுடன் நாம் யாவரும் சிறந்தவைகளைச் செய்ய முடியும், ஆனால் அதே வேளையில் நாம் ஒருவருக்கொருவர் மிகுந்த பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும்!

உறவுகளைப் பற்றிக் கவனித்து நாம் இப்பாடத்தை முடிப்போம். சபையில் உள்ள மற்ற உறுப்பினர்களுடன் உங்கள் உறவுமுறை எப்படி இருக்கின்றது? பவுலைப் போல நீங்கள் விட்டுச் சென்றால், யாராவது அழுவார்களா? மிக முக்கியமாக, கர்த்தருடன் உங்கள் உறவுமுறை எப்படி இருக்கின்றது? அவர் எந்த சபைக்காக மரித்தாரோ, அந்த சபையில் நீங்கள் ஒரு பாகமாக இருக்கின்றீர்களா? (வ. 28). எபேசுவில் பவுல், மனந்திரும்புதல் மற்றும் விசுவாசம் ஆகியவைப் பற்றிப் பிரசங்கித்தார் (வ. 21). ''மனந்திரும்புதல்'' என்றால், உங்கள் பாவங்களுக்காக வருத்தப்பட்டு, உங்கள் வழிகளை மாற்றிக் கொள்ளுதல் என்று அர்த்தமாகும். "விசுவாசம்" என்பது, ஞானஸ்நானம் உட்படக் கர்த்தருக்கான உங்களது முழுமையான பதில்செயலைக் குறிக்கின்றது (எபே. 4:5). கர்த்தருடைய சித்தத்தைச் செய்யுமளவுக்கு அவரைப் போதுமான அளவில் நீங்கள் நம்புகின்றீர்களா? (மாற். 16:16). மனிதர்களிடத்திலோ அல்லது கர்த்தரிடத்திலோ உங்களுக்குள்ள உறவு பற்றி ஏதாவது செய்ய வேண்டுமென்றால், அதைச் செய்வதற்கு இதுவே தக்க வேளையாகும்!

காட்சி-உதவிக் குறிப்புகள்

உங்கள் உரையைக் கேட்பவர்களின் சிந்தைகளில் இந்தத் திறவுகோல் தகவலை ஆழப் பதியவைப்பதற்காக நீங்கள் வேதாகமத்தின் மாறுபட்ட சொற்றொடர்களைக் கொண்ட ஒரு விளக்கப் படத்தைத் தயாரிக்க விரும்பலாம். அவ்வரை படமானது பின்வருவது போல் இருக்கும்:

கர்த்தருடைய சபையில் மூப்பர்கள்

மூப்பர்கள்/பிரிஸ்பிட்டர்கள் - முதியவர்கள் மற்றும் அதிக பக்குவமுள்ளவர்கள்
(1 தீமோ. 5:17; 1 பேது. 5:5)

ஆயர்கள்/கண்காணிகள் - உள்ளூர் சபைக்குப் பொறுப்புடையவர்கள்
(பிலி. 1:1)

மேய்ப்பர்கள்/மேய்க்கிறவர்கள் - உறுப்பினர்களின் ஆவிக்குரிய தேவைகளைக் கவனித்தல்
(1 பேது. 5:2, 3)

பிரசங்கக் குறிப்புகள்

வில்லியம் பார்க்ளே அவர்கள், "இது போன்ற உணர்வுப் பூர்வமான பிரிவு உபசார உரையொன்றைச் செப்பமாகப் பகுத்தாய்வு செய்வது இயலாததாகும்" என்று கூறினார். ஆயினும், பிரசங்கமானது இயல்பாகவே தன்னையே இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொள்கின்றது: பவுலின் சொந்த ஊழியங்களைப் பற்றி அவர் குறிப்பு (வ. 18-27) மற்றும் மூப்பர்களுக்கு அவரின் கட்டளைகள் (வ. 28-35). வசனத்திற்கு

வசனம் அணுகுதல் என்பதற்குப் பதிலாக நான் தலைப்பு ரீதியாக விஷயங்களை ஒழுங்குபடுத்தினேன். மரபு முறையான அணுகு முறையை விரும்புவோருக்காக, வேத பாடப்பகுதி பற்றிய குறிப்புகளை நான் அடிக்குறிப்புகளில் உள்ளடக்கினேன். வார்ரென் w. வயர்ஸ்ப் அவர்கள் விஷயங்களைப் பின்வருமாறு புறக்குறிப்பிட்டார்:

- I. கடந்த காலத்தைப் பற்றிய ஒரு மறுகண்ணோட்டம் (20:18-21)
  - அ. பவுலின் ஊழியத்தினுடைய நடைப் பாங்கு (வ. 18, 19).
  - ஆ. பவுலின் ஊழியத்தினுடைய நோக்கம் (வ. 19).
  - இ. பவுலின் ஊழியத்தினுடைய செய்தி (வ. 20, 21).

- II. நிகழ்காலத்தைப் பற்றிய ஒரு சாட்சியம் (20:22-27) (பவுல் பின்வரும் ஆறு உருவகங்களைப் பயன்படுத்தினார்: கணக்கொப்புவிப்பவர், ஓடுபவர், உக்கிராணக்காரர், சாட்சி, பிரகடனம் செய்பவர் மற்றும் காவலாளி.)

- III. எதிர்காலத்தைப் பற்றிய ஒரு எச்சரிக்கை (20:28-38).
  - அ. நம்மைச் சுற்றிலும் உள்ள அபாயங்கள் (வ. 29).
  - ஆ. நமக்கு மத்தியில் உள்ள அபாயங்கள் (வ. 30).
  - இ. நமக்குள் உள்ள அபாயங்கள் (வ. 31-35).

இந்தப் பிரசங்கத்தின் கருத்துக்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரசங்கங்களில் பயனுள்ள வகையில் கூறி முடிக்கப்படக் கூடும். மூப்பர்கள் மற்றும் அவர்களின் பொறுப்பு பற்றி ஒரு பிரசங்கம் இருக்கக் கூடும். நெருங்கிக் கொண்டிருந்த விசுவாச விலக்கம் பற்றிய பவுலின் எச்சரிக்கை குறித்துத் தனியாக ஒரு பிரசங்கம் பிரசங்கிக்கப்படக் கூடும் (வ. 28-31). சபை முன்னோடிகள் தங்களின் கண்காணிப்புப் பகுதியை விரிவாக்கியதால் - சபை முன்னோடிகளின் மத்தியில் இருந்து விசுவாச விலக்கம் தொடங்கிய செயலானது வரலாற்றின் படியான விஷயமாகும். விசுவாச விலக்கம் பற்றிய மற்ற முன்னு

ரைத்தல்களுக்கு, மத்தேயு 7:15-23; 2 கொரி. 11:3; 2 தெசலோ. 2:1-12; 2 பேதுரு 2:1-3; 3:1-7; வெளி. 17:3-6; 18:1-5 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும்.

இந்தப் பாடமானது ஒரு சபைக்கான உங்களது “பிரிவு உபசார” பிரசங்கத்திற்கு வேதபாடப் பகுதியாக அமையக் கூடும். பவுலைப் போலவே நீங்களும் முதலில் அந்த சபை யாரின் மத்தியில் நீங்கள் செய்த ஊழியத்தைப் பற்றிப் பேசி, பிறகு கர்த்தருக்குத் தொடர்ந்து உண்மையான ஊழியம் செய்வது பற்றி பொதுவாகவும், முன்னோடிகளுக்குக் குறிப் பாகவும், கட்டளை கொடுக்கலாம்.

குறிப்புகள்

[1] 14:14-18ம் உள்ளடக்கப்பட்டால், நடபடிகள் புத்தகத்தில் எட்டு பிரசங்கங்கள் பதிவாகியுள்ளன. “அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 3” இதழில் அப். 14:14-18க்கான குறிப்புகளைக் காணவும். [2]ரோமாபுரியில் பவுலின் பிந்திய விடுதலைக்குப் பிறகு, அவர் மறுபடியும் துரோவா சென்றார் (2 தீமோ. 4:13). அங்கு அவர் கைது செய்யப்பட்டார் என்று சிலர் யூகிக்கின்றனர். [3]ஆசோ பட்டணம் மற்றும் இவ்வேதபாடப் பகுதியில் குறிப்பிட்டுள்ள மற்ற இடங்கள் ஆகியவற்றின் அமைவு பற்றிக் காண, வரைபடத்தைக் காணவும். தீபகற்பத்தில் துரோவா பட்டணத்தின் எதிர்ப் புறத்தில் ஆசோ பட்டணம் இருந்தது-நில வழியே இருபது மைல்கள், கப்பல் வழியே நாற்பது மைல்கள் தூரத்தில் இது இருந்தது. [4]இதை, மாற்கு 6:45, 46ல் இயேசுவின் செயல்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். முந்திய இரவு பவுல் தூங்கவில்லையாதலால், கப்பலில் சென்று படுத்துறங்கிக் கொள்வதற்குப் பதில், இருபது மைல்கள் நடந்து சென்றதற்கு வலுவான காரணம் ஏதாவது அவரிடத்தில் இருந்திருக்க வேண்டும். [5]பல நகரங்களில் நின்று சென்ற (எல்லா நகரங்களிலும் நின்று நின்று செல்லக் கூடிய பயணிகள் புகை வண்டிக்கு ஒப்பான) கப்பலில் பவுல் ஏறியிருந்தார். பிற்பாடு அவர் மிகச் சில நிறுத்தங்கள் மட்டும் கொண்ட (21:2; விரைவுப் புகை வண்டிக்கு ஒப்பான) கப்பலில் ஏறினார். [6]மித்திலேனே என்பது லெஸ்போஸ் தீவின் தென்கிழக்குக் கடற்கரையில் உள்ள துறைமுக நகரம் ஆகும். [7]கீயுவும் சாமுவும் தீவுகள் ஆகும். [8]பண்டிகை நாளொன்றில் பவுல் எருசலேமில் இருக்க விரும்பினார். அவர் ஏற்கனவே பஸ்கா பண்டிகையைத் தவற விட்டிருந்தார் (20:6), மற்றும் பெந்தெகொஸ்தே நாள் வருமுன் இருந்த நாட்களில் மூன்றில் ஒரு பகுதியும் சென்று விட்டிருந்தது, எனவே அவர் அவசரத்தை உணர்ந்தார். பவுல் ஏன் பெந்தெகொஸ்தே நாளன்று அங்கிருக்க விரும்பினார்? பெந்தெகொஸ்தே நாளன்று பவுல் எருசலேமில் இருக்க விரும்பியதற்குப் பலவகையான காரணங்கள் இருந்திருக்கலாம்

(தூரத்திலும், பரவலாகவும் இருந்த நண்பர்களைப் பார்ப்பது, தமது யூத பாரம்பரியத்தைக் கொண்டாடுவது, பிரசங்கிப்பதற்கு அந்த வாய்ப்பை அநுகூலமாக்கிக் கொள்வது, முதலியன); ஆனால், எருசலேமில் இருந்த ஏழை(பரிசுத்தவான்)களுக்காக நிதியுதவியை அவர் எடுத்துச் சென்றதால், அவரது அடிப்படையான நோக்கம் அந்த நிதியுதவியுடன் தொடர்புள்ளதாக இருந்திருக்கலாம். பலர் அந்த நன்கொடையைப் பற்றி அறியும்போது அது மாபெரும் விளைவை ஏற்படுத்தலாம்; ஒருவேளை யூதேயா முழுவதிலும் இருந்த யூத கிறிஸ்தவர்கள் அங்கு இருப்பதென்பது உதவி விநியோகத்தைச் சுலபமாக்குவதாயிருந்திருக்கலாம். [9]பவுல் எபேசுவுக்குச் செல்ல விரும்பியிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் பெந்தெகொஸ்தே நாளின் போது அவர் எருசலேமில் இருக்க வேண்டுமென்றால், இடையில் தாமதிக்க அவருக்கு நேரம் இல்லாதிருந்தது: (1) பவுல் ஏறியிருந்த கப்பலானது எபேசுவில் நிற்கும்படி திட்டமில்லை என்பது உறுதி. எபேசுவில் நிற்பதற்கு, பவுல் கீயுதீவில் கப்பலில் இருந்து இறங்கி, எபேசுவுக்கு வாடகைப் படகொன்றில் சென்று, அங்கு பார்த்த பிறகு, எருசலேமுக்குச் செல்லும் கப்பல் ஒன்றைப் பிடிக்க முயற்சி செய்தாக வேண்டும். (2) எபேசுவிலிருந்து விரைவாகப் புறப்படுவதென்பது பவுலினால் முடியாததாக இருந்திருக்கும். அங்கு அவர் அநேக நண்பர்களைப் பெற்றிருந்தார், மற்றும் கிழக்கத்திய உபசாரமானது விரிவான விழாக்கள் மற்றும் கொண்டாட்டங்களைக் கட்டளையிட்டிருந்தது. (3) இன்னொரு கலகத்தின் மத்தியில் பவுல் இருந்திருக்கக் கூடும் (முன்பே ஒரு கலகம் நடந்த உடனே அவர் எபேசுவை விட்டு புறப்பட்டிருந்தார் [20:1]). [10]மேற்கத்திய வசனத்தில் இவ்விடத்தில் (தமிழில் உள்ளது போலவே) “துரோகில்லியோன் ஊர்த்துறையிலே தங்கி” என்பது உட்புகுத்தப்பட்டுள்ளது.

[11]மிலேத்து என்பது ஒரு முக்கியமான கடல் துறைமுகம் ஆகும். அது ஏதோ ஒரு வகையில் அருகில் இருந்த எபேசுவினால் மறைக்கப்பட்டிருந்தது, ஆனாலும் அது ஒரு பெரிய, முக்கிய நகரமாய் இருந்தது. [12]கப்பலானது அவர் அங்கு சென்று திரும்பி வருமுன் புறப்பட்டு விடும் என்பதால் அவர் அவர்களிடத்தில் செல்லாமல் இருந்திருக்கலாம். மூப்பர்கள் வருமுன் பவுல் ஏறியிருந்த கப்பல் புறப்பட்டு விடுமென்றால், அவர்களுக்கு வசதிக் குறைவாயிருக்கும்; ஆனால் பவுல் கப்பலைத் தவற விட்டால், பண்டிகை நாளில் எருசலேமில் இருக்கும்படி பவுல் பயணமாக அவருக்கு வேறு வழி இருந்திருக்காது. [13]இதற்கு ஓராண்டுக்குச் சற்று அதிகமான காலத்திற்கு முன்பு, பவுல், 2 கொரி. 11:23-33ஐ எழுதியிருந்தார், அதில் தாம் கடந்து வந்திருந்த உபத்திரவங்களைப் பற்றிக் கூறினார். [14]பிரசங்கியார்களை “வேலைக்கு அமர்த்துவதும் நீக்குவதும்” ஆகிய உரிமையை மூப்பர்கள் பெற்றிருப்பதால், பிரசங்கியார் ஒருவர் மூப்பர்களில் ஒருவராகப் பணியாற்றுவது என்பது ஆர்வங்களில் முரண்பாட்டை விளைவிக்கக் கூடும். சில பிரசங்கியார்கள் இப்படிப்பட்ட சூழ்நிலையைக் கையாளுவதற்கு ஆவிக்குரிய பக்குவம் உள்ளவர்களாய் இருக்கின்றார்கள்; பலருக்கு இப்பக்குவம் இருப்பதில்லை. [15]மனந்திரும்புதலும் விசுவாசமும் (வ. 21), சுவிசேஷம் (வ. 24), கிருபை (வ. 24) மற்றும் இராஜ்யம்/சபை (வ. 25) ஆகிய குறிப்பிட்ட சில தலைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மனந்திரும்புதலை முதலாவதாகவும், விசுவாசத்தை இரண்டாவதாகவும் அட்டவணைப்படுத்துவது (வ. 24)

வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது. சாதாரணமாக, மக்கள் இயேசுவில் விசுவாசம் கொண்ட பிறகுதான் தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்புகின்றார்கள் (2:37, 38). இருந்தாலும், பவுல் எபேசுவில் இருந்த விக்கிரகாராதனைக்காரர்களுக்கே பிரதானமாய்ப் பிரசங்கித்தார் என்பதை நினைவில் வையுங்கள். முதலாவதாக அவர் அவர்களை, “விக்கிரகங்களை விட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்ப”(1 தெச. 1:9)ச் செய்ய வேண்டியிருந்தது, இதில் “தேவனிடத்திற்கு மனந்திரும்புவதும்” (வ. 21) அடங்கியிருந்தது. அதன் பிறகு அவர் இயேசுவைப் பற்றி அவர்களுக்குப் போதிக்க முடிந்தது, எனவே அவர்கள் “கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க” (வ. 21) முடிந்தது. [16]இந்த மொழி நடையானது எசேக்கியேல் 3:16-21; 33:1-9 ஆகிய வசனப் பகுதிகளில் இருந்து எடுத்தாளப்படுகின்றது. NCVயில், “உங்களில் எவரேனும் இழந்து போகப்பட்டால், நான் அதற்கு பொறுப்பல்ல’’ என்றுள்ளது. அப். நட. 18:6க்கான குறிப்புகளைக் காணவும். [17]வசனம் 24ல் பவுல், தமது “ஊழியம்” பற்றிப் பேசினார். [18]“பவுல் எருசலேமுக்குப் போகும்படி [தமது] ஆவியில் நிருணயம் செய்து கொண்டார்” (19:21), ஏனென்றால் அது தேவனுடைய சித்தமாயிருந்தது என்பதை அவர் ஏற்றுக் கொண்டார் என்பதால் இவ்வாறானது என்பதில் சந்தேகம் இல்லை. ஆகையால் போவதற்குத் தீர்மானம் செய்திருந்த அவர், எதுவும் இவ்விஷயத்தில் தம்மைச் சிதைத்து விடாதபடி முடிவுவரை ஒப்புக் கொடுத்து உறுதியாய் நின்றார். [19]பரிசுத்த ஆவியானவர் (அவர் பிலிப்புடன் பேசியது போலவே 8:29) பவுலுடன் நேரடியாகப் பேசியிருக்கக் கூடும். ஆனால் “பட்டணந்தோறும்” என்ற வார்த்தைகளானது அநேகமாக, அந்த நகரங்களில் பரிசுத்த ஆவியானவர் அவருடன், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பேசியதைக் குறிப்பிடுவதாக இருக்கலாம் (21:10, 11ஐக் காணவும்). [20]மத்தேயு 16:25; மாற்கு 8:35; லூக்கா 9:24; பிலிப்பியர் 1:23 ஆகிய வசனங்களைக் காணவும்.

[21]எபேசுவில் இருந்த சபையில் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருந்ததைக் கவனியுங்கள். புதிய ஏற்பாட்டில் ஒரு உள்ளூர் சபையைக் கண்காணிப்பதற்கு ஒரு மூப்பர்/ஆயர்/மேய்ப்பர் இருந்ததாக ஒருபொழுதும் பேசப்படுவதில்லை. [22]ஊதியம் பெற்றுப் பணி செய்த சில மூப்பர்களை எனது வாழ்க்கைக் காலத்தில் நான் அறிந்திருக்கிறேன். மூப்பர்களின் பொறுப்புகளானவை அவ்வளவு அவசரத் தேவையுள்ளதாகவும், நேரத்தைப் பட்சிப்பதாகவும் இருப்பதால், சபைக்கு முழுநேர மூப்பர்கள் அதிகமாய்த் தேவைப்படுகின்றனர். [23]இவை யாவும் முதல் நூற்றாண்டில் அந்தஸ்தின் அடையாளங்களாக இருந்தன. இன்றைய நாட்களிலும்கூடப் பல இடங்களில் அவ்வாறே உள்ளன. [24]இதுவே “Presbyterian’’ - பிரிஸ்பிட்டேரியன் என்ற நாமகரணக் கூட்டப் பெயரின் தொடக்கமாகும். இருந்தாலும், சபைக்கு அதன் அரசமைப்பு வடிவத்தின்படியாகப் பெயர் நியமிக்கலாகாது. [25]தேவன் ஒரு மனிதருக்குப் பொறுப்பைக் கொடுக்கின்ற பொழுது, அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்குத் தேவையான அதிகாரத்தையும் கொடுக்கின்றார். ஆகையால், “கண்காணி” என்ற சொற்றொடரானது பொறுப்புடன் கூடவே அதிகாரமும் அடங்கியதாக உள்ளது. [26]“Episcopalian” என்ற நாமகரணக் கூட்டப் பெயர் இதில் இருந்துதான் தொடங்கிற்று. குறிப்பு 24ஐக் காணவும். [27]RSVயில் *episkopos* என்பது “guardian’’ - காப்பாளர் என்று மொழிபெயர்க்கப்

பட்டுள்ளது. [28]“bishop”ஆயர் என்ற வார்த்தையானது கத்தோலிக்கர்களாலும் மற்றவர்களாலும் எவ்வளவு தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதென்றால், அது பல மக்களுக்கு, “ஒரு உள்ளூர் சபையின் கண்காணிகளில் ஒருவர்” என்ற மூலக் கருத்தைக் கொடுக்காததாக உள்ளது. ‘‘bishop’’ - ஆயர் என்ற சொற்றொடரின் தொடக்க கால அர்த்தமானது, இப்பொழுது அவர்கள் கொள்ளும் அர்த்தமாயிருக்கவில்லை என்பதை சுட்டுக்காட்டுவதில் பயன் உள்ளது. [29]“Supervision”என்பது லத்தீனில் இருந்து வந்த வார்த்தையாகவும், “கண்காணிப்பு” என்ற அர்த்தம் கொண்டதாகவும் உள்ளது. மூப்பர்கள், ஆவிக்குரிய ‘‘கண்காணிப்பாளர்கள்’’ என்று அழைக்கப்பட முடியும். [30]சபையைப் பராமரிக்குமுன் மூப்பர்கள் முதலில் தங்கள் நிலை பற்றிய பராமரிப்பை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

[31]இவ்விடத்தில் உள்ள வசனப்பகுதியானது, “அவரது சொந்த இரத்தத்தினாலே” (அதாவது அவரது சொந்த குமாரனாலே) என்று பெறப்படச் சாத்தியமுண்டு, ஆனால் NASBயின் மொழிபெயர்ப்பானது மிகவும் இயல்பானதாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் இயேசுவை “தேவன்” என்று குறிப்பிடும் பத்து வேதவசனப் பகுதியில் இதுவும் ஒன்றாகும். நடபடிகள் புத்தகத்தில் சிலுவையைப் பற்றிய உபதேசத்தின் குறிப்பிடத் தக்க அம்சமாக வசனம் 28ல் உள்ள இது மிக நல்லதொரு கூற்றாகும். நாம் இரத்தத்தால் இரட்சிக்கப்படுகிறவர்களாயிருந்தால், அந்த இரத்தத்தினால் கிரயம் கொள்ளப்பட்ட சபையில் இருக்க வேண்டும் (எபே. 5:23, 27). [32]நடபடிகள் நூலில், இந்த ஓரிடத்தில் மட்டுமே “தேவனுடைய சபை” என்ற விளக்கச் சொற்றொடர் காணப்படுகின்றது, ஆனால் இது பவுலுக்கு மிகப் பிரியமான சொற்றொடராக இருந்தது (எடுத்துக்காட்டாக, 1 கொரி. 1:2). இவ்வசனத்தில் “தேவன்” என்பது அநேகமாக கிறிஸ்துவையே குறிக்கின்றது (முந்திய அடிக்குறிப்பைக் காணவும்). [33]இமெனே மற்றும் அலெக்சந்தர் (1 தீமோ. 1:19, 20); பிகெல்லு மற்றும் எர்மொகெனே (2 தீமோ. 1:15) மற்றும் பிலேத்து (2 தீமோ. 2:17) மற்றும் தியோத்திரேப்பு (3 யோவா. 9) ஆகியோர் அந்தக் கள்ளப் போதகர்கள் ஆவார்கள். [34]“Gnosticism”(அறிவுடைமை வாதம்) என்பது இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் தேவனுக்கு விரோதமாக எழுந்த கொள்கையின் பெயராகும், இது யூதமார்க்கம் மற்றும் புறதெய்வ வழிப்பாட்டாளர்களின் தத்துவங்கள் ஆகியவற்றைக் கலவையாக்கி கிறிஸ்தவத்தை மோசம் போக்கிற்று. இப்பெயரானது ‘‘அறிவு’’ என்பதற்கான கிரேக்க வார்த்தை (gnosis) யில் இருந்து வருகின்றது, ஏனென்றால், இதன் தலைவர்கள் தூண்டப்பட்டிராத மற்றவர்களுக்கு இல்லாத அறிவு தங்களுக்கு இருப்பதாக உரிமை கோரிக் கொண்டார்கள். தேவனை மறுக்கும் இக்கொள்கையின் தொடக்க கால வெளிப்பாடுகள் முதலாம் நூற்றாண்டின் இறுதியில் எழும்பின. எபேசுவில் நிக்கொலாய் மதஸ்தரின் போதனைகள் (வெளி. 2:1, 6; 15ஐயும் காணவும்) என்பது Gnosticism (அறிவுடைமை வாதம்) என்பதன் தொடக்க கால வடிவமாக இருக்கலாம். Gnosticism (அறிவுடைமை வாதம்) பற்றி இன்னும் அதிகமாகக் கற்றுக் கொள்வதற்கு, 1 யோவான் நிருபத்திற்கான தரமான விளக்கவுரையொன்றின் முன்னுரையை வாசிக்கவும். [35]NCVயில் ‘‘நான் உங்களைத் தேவனுடைய பராமரிப்பில் ஒப்புவிக்கிறேன்’’ என்றுள்ளது. [36]எபேசியர் 4:28 உடன் ஒப்பிடவும். [37]இது, “அவரது வாயிலிருந்து சிந்தியும்,

நமது சுருக்கமான சுவிசேஷப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிராத விலையேறப் பெற்ற தெய்வீக சத்தியங்களின் கவளங்களில் ஒன்றாக இருக்கின்றது" (J.W. McGarvey, *New Commentary on Acts of Apostles,* vol. 1 [Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.], 193). (யோவான் 20:30ஐக் காணவும்). முதல் சுவிசேஷ நூல் எழுதப்படுவதற்கு முன்னதாகவே, பவுல் இவ்விடத்தில் இயேசுவை மேற்கோள் காட்டினார். பவுல் தாம் மனமாறிய பிறகு, கர்த்தரிடத்தில் இருந்து நேரடியான அறிவுறுத்தல்களைப் பெற்றிருந்தார் (கலா. 1:11, 12, 17). "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 2" இதழில் உள்ள குறிப்புகளைக் காணவும். [38]வசனம் 25ஐக் காணவும். "அவர்கள் அவரது முகத்தை இனிப் பார்க்க மாட்டார்கள்" என்ற பவுலின் கூற்றானது, ஒரு சிறு பிரச்சனையை முன் வைக்கின்றது, ஏனென்றால் பின்னாளில் பவுல் எபேசுவுக்கு மறுபடியும் சென்றிருக்கலாம் (1 தீமோ. 1:3; 3:14). பின்வரும் கருத்துக்களை ஆராய்ந்து பாருங்கள்: (1) எருசலேமில் தமக்கு என்ன நேரிடும் என்பதைத் தாம் அறியாதிருப்பதாகப் பவுல் குறிப்பாகக் கூறியதனால் (வ. 22), "கட்டுகளும் உபத்திரவங்களும்" வைக்கப்பட்டிருந்தது (வ. 23) என்ற ஏவுதல் பெற்ற எச்சரிக்கையின் அடிப்படையில் அமைந்த அவரது சொந்த முடிவாக இந்த வார்த்தைகள் இருந்திருக்கலாம். பவுல் தாம் எருசலேமில் மரிக்கப் போவதாய் எதிர்பார்த்தார் (வ. 24). அப்படியில்லையென்றால், அவர் உடனடியாக ரோமாபுரிக்குச் சென்று அதைத் தமது செயல்பாடுகளின் அடித்தளமாக ஏற்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டிருந்தார் (ரோமர் 15:23-25). எவ்வழியிலும், அவர், தாம் மறுபடியும் எபேசுவுக்குத் திரும்புவோமென்று எதிர்பார்க்கவில்லை. (2) அவர் எபேசுவை அடைந்தபோது (அடைந்திருந்தால்) ஆண்டுகள் சில கடந்து விட்டிருந்ததால், அந்த மூப்பர்கள் வேறிடம் சென்றிருக்கலாம் அல்லது அதற்குள்ளாக இறந்திருக்கலாம் - எனவே அவர் அவர்களின் முகங்களை மறுபடியும் காணவில்லை. (3) கர்த்தரும், சூழ்நிலைகளும் பவுலின் நிலைப்பிடத்தை அடிக்கடி மாற்றினர். [39]முத்தஞ்செய்தல் என்பது அந்நாட்களில், வாழ்த்துதல் (அல்லது வழியனுப்புதல்) என்பதற்கான வழிமுறையாய் இருந்தது; அது நட்பின் உறவை குறிப்பிட்டது (லூக். 22:47, 48; ரோமர் 16:16ஐக் காணவும்).